# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2078 - 2018 ජූනි මස 29 වැනි සිකුරාදා - 2018.06.29

*2078 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1282 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |


**கவனிக்க.-** (i) அமரதேவ அழகியல் மற்றும் ஆராய்ச்சி நிலையம் சட்டமூலம் 2018, யூன் மாதம் 14 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) மதுவரி (திருத்தம்) சட்டமூலம் 2018, யூன் மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2018, யூலை மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, யூலை மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.


*1279-B 81425-5,403 (2018/06)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

*கலாசார அலுவல்கள் திணைக்களம்*

### அரச இசைக் குழுவின் இசைக் கலைஞர் பதவியின் பொருட்டு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்துக்கொள்ளல்

*கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் அரச இசைக் குழுவில் வெற்றிடங்களின் பொருட்டு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்வதற்கு கீழ்க் குறிப்பிடப்படும் தகுதிகள் உள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*இந்த ஒப்பந்தத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப A4 அளவினையுடைய தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2018.07.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "பணிப்பாளர் கலாசார அலுவல்கள் திணைக்களம், 08 ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இசைக் கலைஞர் (ஒப்பந்த அடிப்படையில்)" என்று தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். அன்றைய திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். இந்த அறிவித்தலை www.cultural.dept.gov.lk என்ற இணையத் தளத்தில் பார்வையிடலாம்.*

*1.0* **பணியில் ஈடுபடுத்தச் செய்தல் மற்றும் பணி நிபந்தனைகள் :**

(1) *ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவதுடன் 03 வருட ஒப்பந்த காலத்தின் பொருட்டு நியமிக்கப்படும்.*

(2) *சம்பளம் ரூபா 33,600 மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படும்.*

*2.0* **கல்வி மற்றும் பிற தகைமைகள் :**

I. ***கல்வித் தகைமைகள் :***

*கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சங்கீதப் பாடம் உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்;*

*மற்றும்*

*தேசிய சங்கீத இடைநிலை தரம் அல்லது இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அல்லது பாத்கண்டே கல்லூரியில் சங்கீதத்திற்கான விசாரத பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்;*

*அல்லது*

*பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் அங்கீகரிக்கப்படுகின்ற சங்கீதப் பாடம் தொடர்பில் பட்டத்தினை பெற்றிருத்தல்.*

II. ***தொழிற் தகைமைகள்.*** *- உரித்துடையதல்ல (தகுதி மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சையில் தொழில்சார் தகுதிகள் மேலதிக தகைமை ஒன்றாகக் கருதப்படும்).*

III. ***அனுபவம் :***

*அரசாங்கத்தின் அங்கீகரித்த கலை நிறுவனம் ஒன்றில் அல்லது கலாசார அலுவல்கள் பணிப்பாளரினால் ஏற்றுக்கொள்ளப்படும் அதற்கு இணையான நிறுவனம் ஒன்றில் இசைக் கலைஞராக 05 வருட அனுபவத்தினைக் கொண்டிருத்தல்;*

*அல்லது*

*பரம்பரை ரீதியான இசைக் கலைஞராக இருத்தல் (எழுத்து மூலம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்).*

IV. ***உடற் தகைமைகள் :***

(i) *ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பதவியின் பணிகளை நிறைவேற்றுவதற்கும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலாயினும் பணியாற்றுவதற்கும் போதுமானளவு உடல் மற்றும் உள ரீதியான பொருத்தப்பாடு மனநிலையினை கொண்டதாக இருத்தல்;*

(ii) 5 அடி 3 அங்குலத்தற்குக் குறையாத உயரத்தினைக் கொண்டிருத்தல்

V. ***ஏனைய தகைமைகள் :***

(i) சகல விண்ணப்பதாரிகளும் சிறந்த குண ஒழுக்கத்தினையும் சிறந்த உடல் பொருத்தப்பாட்டினையும் கொண்டவராக இருத்தல் வேண்டும்;

(ii) பதவியில் ஆட்சேர்த்துக்கொள்ளும் பொருட்டான தகுதிகளை பூர்த்தி செய்தல் வேண்டும் என விண்ணப்பப் படிவத்தினை கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற திகதியில் அத் தகுதிகளை சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்;

(iii) பாடல் /வாத்தியம் சகல பிரிவுகளிலும் தேர்ச்சியடைந்துள்ளமை கவனத்திற் கொள்ளப்படும்.

3.0 **வயதெல்லை**.- விண்ணப்பப்படிவத்தினைப் பொறுப்பேற்கும் திகதியில் 18 வருடங்களுக்குக் குறையாத மற்றும் 45 வருடங்களுக்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும்.

4.0 **ஆட்சேர்த்துக்கொள்ளும் முறை** :

- தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையிலும் தொழில்சார் பரீட்சையினதும் பெறுபேற்றின் அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.

- தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் தொழில்சார் பரீட்சைக்கு உட்படுத்தப்படும் வேளை, தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையிலும் தொழில் சார் பரீட்சைகளிலும் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் திறமைப் படிமுறைக்கேற்ப பதவியில் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

***தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை:***

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | உயர்ந்த பட்ச புள்ளி அளவு | தெரிவு செய்வதற்கு கவனத்திற் கௌ்ளப்படுகின்ற ஆகக் குறைந்த புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 20 | உரித்துடையதல்ல |
| 2. குறித்த துறையில் பெற்றுள்ள அனுபவங்கள் (சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்) | 35 | |
| 3. தொழிற் தகைமைகள்<br>i. பிரபல கலைஞர்களின் கீழ் தேசியமட்ட படைப்புக்களில் கலந்துகொண்டிருத்தல்<br>ii. கலாசார நிலையங்கள் ஊடாகவோ அல்லது பிரபல கலைஞர்கள் ஊடாகவோ வெளிநாட்டு கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருத்தல் | 25 | |
| 4. மொழித் தேர்ச்சி | 15 | |
| 5. நேர்முகப் பரீட்சைகளில் காட்டும் திறமைகள் | 05 | |
| மொத்தம் | 100 | |

***தொழில்சார் பரீட்சை:***

| புள்ளி வழங்கும் பிரதான தலைப்புக்கள் | உயர்ந்த பட்ச புள்ளி அளவு | தேறுவதற்கான புள்ளி அளவு |
|---|---|---|
| 1. பிரதான பாடம் (பாடல்/வாத்தியம்) | 60 | 30 |
| 2. நானாவிதம் (பாடகருக்காக இசை/ இசையமைப்பாளருக்காக பாடல்) | 20 | 10 |
| 3. ஸ்வர தாளங்களின் பாடும்/எழுதும் திறன் | 20 | 10 |
| மொத்தம் | 100 | 50 |

5.0 **விண்ணப்பதாரிகளின் அடையாளம்**

விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யும் போது கல்வி மற்றும் பிற தகைமைகள் தொடர்பான விபரங்களை பிழையின்றி உட்படுத்த வேண்டியதுடன் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு விடுக்கப்படுவது சகல விதத்திலும் முழுமையான விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமேயாகும்.

நேர்முகப் பரீட்சையின் சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதியுடன் முறையான பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது தனது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்தும் பொருட்டு கீழ் குறிப்பிடப்படும் அடையாளப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை;

2. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

6.0 பதவியினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஏதேனும் ஒரு விதத்தில் வற்புறுத்தல்களை மேற்கொள்வது பதவியின் பொருட்டான தகுதியற்ற நிலை ஒன்றாக அமையும்.

7.0 விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படும் ஏதேனும் ஒரு விடயம் அது தவறானது என ஒருவர் தெரிவு செய்யப்பட முன்னர் தெரிந்து கொள்ளப்பட்டால் தகுதியற்றவர் என பெயரிடவும், நியமனம் செய்ததன் பின்னர் அவ்வாறு வெளிக்கொணரப்பட்டால் பதவியிலிருந்து விலக்கவும் காரணமாக அது அமையும்.

8.0 சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் மொழிகளுக்கிடையே ஏதேனும் ஒரு பொருத்தமற்ற நிலை அல்லது இசைவின்மை நிலை காணப்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள அறிவித்தலுக்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அனுஷா கோகுல பர்னாந்து,
பணிப்பாளர்,
கலாசார அலுவல்கள் திணைக்களம்.

கலாசார அலுவல்கள் திணைக்களம்,
08 ஆம் மாடி, செத்சிறிபாய,
பத்தரமுல்லை.
2018, யூன் 12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலகப் பாவனைக்காக: [ ]

**கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இசைக் கலைஞர் (ஒப்பந்த அடிப்படையில்) பதவிக்காக விண்ணப்பித்தல்.**

01. முதலெழுத்துக்களுடன் பெயர் : ..........................................................................
02. முதலெழுத்துக்களை குறிக்கும் பெயர்கள் : ..............................................................
03. பிறந்த திகதி : .........................................................................
04. வயது (2018.07.31 ஆந் திகதிக்கு) ..........................................................................
05. உயரம் : .......................... அடி ............................. அங்குலம்
06. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..................
07. (ஆண்/பெண்) பால்நிலை : ..................
08. முகவரி : ..................
09. தொலைபேசி இலக்கம் : ..................
10. கல்வித் தகைமை :

i. க. பொ. த. (உ.த.)

ஆண்டு :................................ பரீட்சை சுட்டெண் :..........................

| பாடம் | பெற்ற சித்தி |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

ii. பெற்ற பட்டம் : .................................................

| செல்லுபடியாகும் திகதி | துறை | நிறுவனம்/பல்கலைக்கழகம் |
|---|---|---|
| | | |
| | | |

iii. தேசிய சங்கீத இடைநிலை அல்லது இறுதிப் பரீட்சை /பாத்கண்டே கல்லூரியின் சங்கீத விசாரத பட்டப் பரீட்சை

| செல்லுபடியாகும் திகதி | துறை | நிறுவனம்/பல்கலைக்கழகம் |
|---|---|---|
| | | |
| | | |

11. தொழிற் தகைமைகள் :................................

12. அனுபவம் : ..............................

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள சகல தகவல்களும் நான் அறிந்த வரையில் உண்மையானதும் சரியானதும் எனவும் இங்கு வழங்கப்பட்டுள்ள ஏதேனும் தகவல்களில் ஒன்றாவது பிழையானது என தெரிவு செய்வதற்கு முன்னர் அறியக் கிடைத்தால் நான் தகுதியற்றவன் எனவும் நியமனம் பெற்றதன் பின்னர் அது தொடர்பில் வெளிக்காட்டப்பட்டால் நியமனம் செல்லுபடியற்றதாகும் என்பதனையும் நான் அறிவேன்.

திகதி : .........................................

................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

6 - 1011

---

## நீர்ப்பாசன, நீர்வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

நீர்ப்பாசனத் திணைக்களம்

### நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பொறியியல் உதவியாளர் சேவையின் தரம் III இற்கான பொறியியல் உதவியாளர் பதவிகளுக்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவையின் தரம் III இற்கான பொறியியல் உதவியாளர் வெற்றிடத்திற்காக நேரடியாக ஆட்சேர்ப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்திற்கிணங்க தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2018.08.02 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் "கொழும்பு 07, இலக்கம் 230, பௌத்தாலோக்க மாவத்தை, நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்" அவர்களுக்கு அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவையின் தரம் III இற்கான பொறியியல் உதவியாளர் பதவி (நேரடியாக ஆட்சேர்த்தல்)" என தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

1.0 **ஆட்சேர்க்கும் முறை :**

(அ) அனைத்து ஆட்சேர்ப்புகளும் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 15/90 இற்கிணங்கவும் மற்றும் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கிணங்கவும் மேற்கொள்ளப்படும்.

(ஆ) எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும்.

எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிகளின் திறமைகளுக்கு இணங்க ஆட்சேர்ப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள தொகைக்கு சமனான தொகையை நேர்முகப் பரீட்சைக்குட்படுத்தி தகுதியுடையவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

எழுத்து மூலப் பரீட்சை பற்றிய பாடவிதானம் கீழே காட்டப்பட்டவாறு அமையும் :

| வினாப்பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைய வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|
| ***நுண்ணறிவுப் பரீட்சை*** : தர்க்க ரீதியான மற்றும் பகுப்பாய்வு பற்றிய இயலுமை தீர்மானித்தல் ரீதியான சிந்தனை மற்றும் அவரது தீர்மானம் எடுக்கும் திறமை என்பன பரீட்சிக்கப்படும். | (01) மணித்தியாலம் | 100 | 40 |
| ***தொழில்நுட்பப் பரீட்சை :*** அட்சர கணிதம், ஆள்கூற்று கேத்திர கணிதம், பங்கு வீதக்கணிப்பு, திரிகோண கணிதம், Hydrostatics, புள்ளிவிபரவியல், மின்னியல், இயந்திரவியல், வெப்ப அளவு ஆகிய பிரிவுகளின் அறிவு பரீட்சிக்கப்படும். | (02) மணித்தியாலங்கள் | 100 | 40 |

2.0 (அ) **கல்வித் தகைமைகள் :**

(1) கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சையில் சிங்களம் / தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் அத்தோடு வேறு ஏதாவது ஒரு பாடத்திலும் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்;

அத்துடன்

(2) பழைய பாடத்திட்டத்திற்மைய கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சையில் பௌதீகவியல், தூய கணிதம், பிரயோக கணிதம் மற்றும் இரசாயனவியல் ஆகிய துறையில் உரிய பாடத்தில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்;

அல்லது

புதிய பாடத்திட்டத்திற்கமைய கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சையில் உயர் கணிதம் அல்லது இணைந்த கணிதம் பௌதீகவியல் மற்றும் இரசாயனவியல் ஆகிய மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்;

(ஆ) **தொழில்சார் தகைமைகள்:**

I. கல்கமுவ, கொத்மலை நீர்ப்பாசன பயிற்சி நிறுவகத்தின் நீர்ப்பாசனப் பொறியியலாளர் டிப்ளோமா கற்கை நெறியை மேற்கொண்டு சான்றிதழ் பெற்றிருத்தல்;

அல்லது

II. மொரட்டுவை கட்டுபெத்த பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா (சிவில் பொறியியல்) கற்கை நெறிக்கான சான்றிதழ் பெற்றிருத்தல்;

அல்லது

III. மட்டக்குளி இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினால் நடாத்தப்படும் உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (சிவில் பொறியியல்) கற்கை நெறிக்கான சான்றிதழ் பெற்றிருத்தல்;

அல்லது

IV. கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்பம் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா (சிவில் பொறியியல்) கற்கை நெறிக்கான சான்றிதழ் பெற்றிருத்தல்;

அல்லது

V. இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில் நுட்பவியல் டிப்ளோமா (சிவில் பொறியியல்) கற்கை நெறிக்கான சான்றிதழ் பெற்றிருத்தல்;

அல்லது

VI. பல்கலைக்கழக் மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது மூன்றாம் நிலைக்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் மேலே குறிப்பிட்ட கற்கை நெறிக்குச் சமமான கற்கை நெறியை மேற்கொண்டு அதற்குரிய சான்றிதழ் பெற்றிருத்தல். (இக்கற்கை நெறி NVQ 6 மட்டத்தில் இருக்க வேண்டும்)

3.0 **ஏனைய தகைமைகள் :**

(1) 2018.08.02 ஆந் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதை விட அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும். (மாகாண மற்றும் அரச சேவையிலுள்ளவர்களுக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லை ஏற்புடையதல்ல.)

(2) இலங்கையில் எப்பிரதேசத்திலும் சேவை புரிவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையான உடல் மற்றும் உள ரீதியாக தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

(3) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(4) சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

(5) சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக்கொள்ளப்படுவது விண்ணப்பதாரர் உரிய அனைத்து தகைமைகள் மற்றும் குறிப்பிட்ட வயதெல்லை விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தினத்திற்கு அனைத்து விதத்திலும் பூரணப்படுத்தப்பட்டிருந்தால் மட்டுமே ஆகும்.

4.0 **சேவைக்குரிய நிபந்தனைகள்**

(அ) இந்த நியமனம் நிரந்தரமானது. ஓய்வூதிய முறை பற்றி அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நீங்கள் கீழ்படிதல் வேண்டும். மேலும் நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதிக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்;

(ஆ) விண்ணப்பதாரர்கள் முதலில் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு ஆட்சேர்ப்பது பயிலுனர் என்ற அடிப்படையில்;

(இ) கோட்பாட்டு ரீதியான மற்றும் செயன்முறை ரீதியானதுமான பயிற்சியும் உள்ளடங்கியதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் தீர்மானிக்கப்படும் ஆறு மாத கால சேவைப் பயிற்சி ஒன்று வழங்கப்படும். அதன் பின்னர் நடாத்தப்படும் கோட்பாட்டு ரீதியான மற்றும் செயன்முறை ரீதியான பரீட்சையில் சித்தியில் அவர்கள் காட்டும் திறமையின் அடிப்படையில் அவர்களின் மூப்புநிலை தீர்மானிக்கப்படும்.

(ஈ) நேரடி ஆட்சேர்த்தல் திட்டத்தின் கீழ் ஆட்சேர்க்கப்பட்ட பயிற்சியைப் பெறும் ஆறு மாத காலத்திற்கு மாதத்திற்கு ரூபா 22,008 படியாக வழங்கப்படும். இப்படியானது நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்டதற்கு இணங்க நீடிக்கப்படும். பயிற்சிக் காலத்திலும் வழங்கப்படும். பயிற்சிக் காலத்தில் வேறு சலுகைகள் அல்லது உரிமைகள் கிடைக்கப்பெற மாட்டாது.

(உ) நீர்ப்பாசன பயிலுனர்களின் தாபனக் கோவை ஏற்பாடுகளுக்கிணங்கவும் அரசினால் காலத்திற்குக்காலம் வெளியிடப்படும் வேறு ஒழுங்கு விதிகளுக்கும் கட்டுப்பட வேண்டும். பயிற்சியைப் பெறும் காலப்பகுதிக்கு அவர்களுக்கு விடுமுறை அல்லது புகையிரதப் பயண உத்தரவுச் சீட்டு பெறுவதற்கு உரிமையில்லை.

(ஊ) அனைத்து விரிவுரைகள் மற்றும் பயிற்சி நெறி என்பன ஆங்கில மொழியில் நடாத்தப்படும்.

(எ) பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவையின் தரம் III இற்கான பொறியியல் உதவியாளர் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

(ஏ) இந்நியமனம் பயிலுனர் காலத்தைப் பூர்த்தி செய்து தரம் III இற்கான பொறியியல் உதவியாளருக்கான முறையான நியமனம் பெற்றுக்கொண்ட திகதியிலிருந்து 03 வருடங்களுக்கு தகுதிகாண் காலத்திற்கு உட்படும்.

(ஐ) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் 05 வருடங்களுக்கு கட்டாய சேவைக் காலத்தை பொறியியல் உதவியாளர் பதவியில் சேவை செய்வதாக உடன்படிக்கையொன்றில் கையொப்பமிடல் வேண்டும். அதற்கு முன்னர் சேவையிலிருந்து நீங்குவதற்கு தேவையேற்பட்டால் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை அரசாங்கத்திற்கு செலுத்துதல் வேண்டும்.

5.0 **சம்பள முறை.**- பயிற்சிக் காலத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்த பின்னர் இப்பதவிக்காக மாதாந்த சம்பளமாக எம்என் 3 – 2016 மற்றும் சம்பள அளவுத் திட்டம் (அ. நி. சு. அறிக்கை இலக்கம் 06/2016 இற்கு இணங்க) ரூபா 31,040 - 10 × 445– 11 × 660 – 10 × 730 – 10 × 750 – ரூபா 57,550 ஆகும். (ரூபா 31,930 வருடாந்த சம்பள நிலைக்கு முன்னர் வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையொன்று உள்ளது).

6.0 விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்துடன் கீழ்க் காணப்படும் சான்றிதழ்களின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியை கையளித்தல் வேண்டும்:-

- பெற்றுக்கொண்டுள்ள தொழில் நுட்பவியல் சான்றிதழ் ;
- கல்விப் பொதுத்தராதரப் பத்திரப் (உயர்தர) பரீட்சைச் சான்றிதழ்;
- கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் (சாதாரண தர) பரீட்சைச் சான்றிதழ்;
- பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்;
- இறுதியாக கல்வி கற்ற பாடசாலை அதிபரிடம் பெற்றுக்கொண்ட நன்னடத்தைச் சான்றிதழ்;
- வதிவிட பிரதேசத்தின் கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட (டி. எஸ். 4 படிவம்) நன்னடத்தைச் சான்றிதழ்.

**குறிப்பு** : மேலே குறிப்பிட்ட சான்றிதழ்களின் பிரதிகள் திருப்பித் தரப்படமாட்டாது.

7.0 மாகாண மற்றும் அரச சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

8.0 விண்ணப்பதாரர்கள், நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்ட நிறுவனத்தினால் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சைக்கும் தமது செலவிலேயே தோற்றுதல் வேண்டும்.

9.0 சேவை அவசியத்தைப் பொறுத்து எந்த சந்தர்ப்பத்திலும் தீவின் எந்தப் பிரதேசத்திலும் சேவைப் புரிவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும். திணைக்களத்தின் வேலைத்தளங்கள் பெரும்பாலும் போக்குவரத்து மற்றும் தங்குமிடவசதி குறைந்த கஷ்டப் பிரதேசங்களில் அமைந்திருக்கிறது என்பதை விண்ணப்பதாரர்கள் புரிந்துகொள்ளுதல் வேண்டும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் கஷ்டப் பிரதேசங்களுக்க நியமிக்கப்படுவதோடு குறைந்த பட்சம் ஐந்து (05) வருடங்கள் அத்தகைய பிரதேசத்தில் கடமைப்புரிதல் வேண்டும்.

10.0 விண்ணப்பதாரரால் குறிபபிடப்பட்டுள்ள ஏதாவது பொய்யான தகவல்கள் ஆட்சேர்ப்பதற்கு முன்னர் நிரூபிக்கப்பட்டால் விண்ணப்பதாரரின் விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறான பொய்யான தகவல்கள் ஆட்சேர்க்கப்பட்ட பின்னர் நிரூபிக்கப்பட்டால் அவரது சேவைமுடிவுறுத்தப்படும். இதற்கு மேலதிகமாக பொய்யான தகவல்களை சமர்ப்பித்தமைக்கு எதிராக சட்டத்தின் மூலம் தண்டனைப் பெற்றுக்கொடுக்கப்படும்.

(பொறியியலாளர்) எஸ். மோகனராஜா,
நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
இல. 230, பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு 07.
2018, யூன் 13.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீர்ப்பாசன, நீர்வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு**

நீர்ப்பாசனத் திணைக்களம்

***நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பொறியியல் உதவியாளர் சேவையின் தரம் III இற்கான பொறியியல் உதவியாளர் பதவிகளுக்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை***

1. (அ) முழுப்பெயர் : ..........................................................................
(தமிழில்)

(ஆ) முழுப் பெயர் : ...........................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

(இ) முதலெழுத்துக்களுடன் பெயர் : ..........................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

2. பால் (ஆண்/பெண்) : ...............................................................................................

3. (அ) தபால் முகவரி : ...........................................................................
(தமிழில்)

(ஆ) தபால் முகவரி : ...........................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

(இ) நிரந்தர முகவரி : .........................................................................

(ஈ) தொலைபேசி இல. : ........................................................................

(உ) நிலையான தொலைபேசி இல. : ................................

கையடக்கத் தொலைபேசி இல. : ................................

(ஊ) மின்னஞ்சல் முகவரி : ......................................................................

4. வதிவிட மாவட்டம்: ...............................................................................

5. பிரதேச செயலாளர் பிரிவு : ......................................................................

6. பிறந்த திகதி :- (பிறப்புச் சான்றிதழ் பிரதியொன்றை இணைக்கவும்)

(அ) ஆண்டு : ........................மாதம் : ..................... திகதி: ...........................

(ஆ) பிறந்த இடம் : ..........................................................................

(இ) 2018.08.02 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் : ................. மாதங்கள் : ........................ நாட்கள் : ...........................

7. தேசிய ஆளடையாள அட்டை இல. : ..................................................................

8. நீர் ஓர் இலங்கைப் பிரசையா (ஆம்/இல்லை) : .................................................

இனம் :

| | |
|---|---|
| சிங்களவர் | |
| இலங்கைத் தமிழர் | |
| இந்தியத் தமிழர் | |
| முஸ்லிம் | |

(தரப்பட்டுள்ள கூட்டினுள் உரிய இடத்தில் (✓) அடையாளம் இடவும்.)

9. கல்வித் தகைமைகள் (சான்றுப் பத்திரங்களின் பிரதிகளை இணைக்கவும்) :....................................

9.1 க. பொ.த. (சா. த.) பரீட்சைச் சான்றிதழ்:

முதலாம் அமர்வு:

சுட்டெண் : ................................ வருடம் : .............................

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |

| பாடம் | தரம் |
|---|---|
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

இரண்டாம் அமர்வு (தேவைப்படின்) :

சுட்டெண் : ................................ வருடம் : ................................

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |

| பாடம் | தரம் |
|---|---|
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

9.2 க. பொ. த. (உ. த.) பரீட்சை சான்றிதழ்

சுட்டெண் : ................................ வருடம் : ................................

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

10. தொழில் நுட்பத் தகைமைகள் (சான்றுப் பத்திரங்களின் பிரதிகளை இணைக்கவும்):
..........................................................................................
(தயவு செய்து பயிற்சி நெறியின் பெயரையும் தொழில்நுட்ப நிறுவனத்தின் பெயரையும் தருக.)

11. நீர் அரச திணைக்களத்தில் அல்லது அரச கூட்டுத்தாபனத்தில் முன்னர் சேவையாற்றியிருப்பின், நீர் ஏன் இராஜினாமா / சேவையை விட்டு விலகல் / சேவையைத் தொடராமை சேவை நீக்கம் ஏற்பட்டதற்கான காரணத்தைக் குறிப்பிடவும்: ............................................................

12. தற்போது உத்தியோகத்திலிருப்பின் கீழ்வரும் விபரங்களைத் தரவும்:

(அ) பதவி :........................

(ஆ) நிறுவனம் :........................

(இ) நியமனத் திகதி :........................

(ஈ) தொழிலின் தன்மை :........................

13. இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானதும் சரியானதும் என உறுதி கூறுகிறேன். மேலும் இவ்விண்ணப்பத்தில் பிழையான தகவல்கள் ஏதும் உள்ளடக்கப்பட்டிருப்பின், அது தகைமையற்றதாகும் என்பதையும் நான் நன்கு அறிவேன். அத்தோடு அது ஆட்சேர்ப்பின் பின்னர் தெரியவரின் எவ்வித நட்ட ஈடுமின்றி பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கு காரணமாக அமையும் என்பதையும் நான் அறிவேன்.

..............................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி: ..............................................

திணைக்களத் தலைவரின் விதப்புரை:

(அரசாங்க திணைக்களங்களில், மாகாண சபையில் உள்ளவர்களுக்கு மட்டும்)

.......................................... என்பவர் இத்திணைக்களத்தில் / நிறுவனத்தில் தொழில் புரிகிறார். இவரது வேலை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானது எனவும் இதில் வேண்டப்பட்டுள்ள தேவைகளுக்கும் நிபந்தனைகளுக்குமிணங்க

இவர் இப்பதவிக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர் எனவும் சான்று பகர்கின்றேன். அவர் தெரிவு செய்யப்படின் விடுவிக்க முடியும் / முடியாது எனவும் உறுதி கூறுகிறேன்.

..............................................,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(அலுவலக முத்திரை).

பெயர் : ..................................................
பதவி : ..................................................
முகவரி : ..................................................
திகதி : ..................................................

*6-1124*

---

திருத்தம்

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

*2018*, மே மாதம் *25* ஆந் திகதிய *2,073* ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (II அ) இல் பிரசுரிக்கப்பட்ட "இலங்கைக் கணக்காளர் சேவையின் III ஆம் தரத்திற்கான தொழில் தகைமை மற்றும் திறமை அடிப்படையில் நேரடியாக ஆட்சேர்ப்பு செய்தல் - *2016*" அறிவித்தலின் முதற் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பத்தினை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி *2018*, யூலை மாதம் *25* ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

இதுவரை விண்ணப்பங்களை பதிவுத் தபால் மூலம் அனுப்பியுள்ள அல்லது அரச நிருவாகம், முகாமைத்துவம் மற்றும் சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சுக்கு வருகை தந்து ஒப்படைத்த விண்ணப்பதாரிகள் மீள விண்ணப்பிக்க அவசியமில்லை.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

பத்மசிறி ஜயமான்ன,
செயலாளர்,
அரச நிருவாகம், முகாமைத்துவம் மற்றும்
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
*2018*, யூன் *25*.

*6-1157*